### வாக்குமூலம்

### மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

### ஜீவனாம்ச வழக்கு எண்:05/2024

### வழக்கு சாட்சி:1

| | |
|---|---|
| பெயர்: வேதநாயகி (PW 1) | தாலுக்கா: |
| தந்தை பெயர் : | தொழில்: |
| கிராமம்: | வயது: |

**2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் நாள் வெள்ளிக்கிழமை** மனுதாரர் தரப்பில் வாக்குமூலம் 1883ஆம் ஆண்டு 12வது ஏற்பாட்டின்படி திரு.கோ.பாண்டியராஜன், பி.காம்., பி.எல்., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

*(எதிரி ஆஜர்.)*

**ம.சா.1 முதல் விசாரணை:-**

ம.சா.1 ஆகிய நான் இந்த வழக்கில் 1ம் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கில் என் தரப்பு முதல் நிரூபண ஆணையுறுதி வாக்குமூலத்தை தாக்கல் செய்கிறேன். நிரூபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் தெரியும். நிரூபண உறுதிக்கூற்று வாக்குமூலத்தை முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகிறேன். நான் பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை

1) திருமண பத்திரிக்கை அசல் **ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்து**

2) 1ம் மனுதாரரின் மருத்துவ சான்றுகள் மற்றும் மருந்து வாங்கியதற்கான பில் (எண்ணிக்கை 14) அசல் **ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்து**

3) 2ம் மனுதாரரின் பள்ளியில் கட்டணம் செலுத்தியதற்கான இரசீதுகள் (எண்ணிக்கை 11) அசல் **ம.சா.ஆ.3ஆக குறியீடு செய்து**

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.06 06:06:52 +0530

4) மனுதாரர், எதிர் மனுதாரரின் திருமண புகைப்படம் **ம.சா.ஆ.4 ஆக** குறியீடு செய்துகொண்டு பிராதுப்படி தீர்ப்பளிக்க வேண்டுகிறேன்.

**மனுதாரரின் வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க ஆவணங்கள் குறியீடு செய்ய ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2025.10.06 06:06:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.